# விழுப்புரம் நகராட்சி

**2020–ம் ஆண்டு நவம்பர் மாதம் 30–ம் தேதி திங்கட்கிழமை காலை 10.25 மணிக்கு விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில்** நடைபெற்ற **“சாதாரண கூட்ட”** நடவடிக்கைகள்.

**முன்னிலை :–** **ந.தட்சணாமூர்த்தி, பி.காம்.,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**

## மன்றப் பொருள்

**1.** இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரது அக்டோபர் 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

பதிவு செய்யலாம். ( / /சி1)

**2.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3, ஆடு அடிக்கும் தொட்டி வளாகம் அருகில் அமைக்கப்பட்டுள்ள நுண்உர செயலாக்க மையத்திற்கு (MCC) தண்ணீர் வசதி, மின்சார வசதி மற்றும் வர்ணம் பூசுதல் ஆகிய பணிகள் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.80 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(3696/2019/இ1)

**3.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 எல்லீஸ்சத்திரம் (ES கல்லூரி அருகில்) அமைக்கப்பட்டுள்ள நுண்உர செயலாக்க மையத்திற்கு தண்ணீர் வசதி, மின்சார வசதி மற்றும் வர்ணம் (Painting) பூசும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.10 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

( 3697/2019/இ1)

**4.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3, ஆடு அடிக்கும் தொட்டி வளாகம் அருகில் அமைக்கப்பட்டுள்ள நுண்உர செயலாக்க மையத்திற்கு (MCC) கொண்டு வரப்படும் மக்கும் குப்பைகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டி பதப்படுத்தும் பணிக்கு Shredding Machine இயந்திரம் வாங்கி பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.70 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

( 3695/2019/இ1)

**5.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 எல்லீஸ்சத்திரம் (ES கல்லூரி அருகில்) பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நுண்உர செயலாக்க மையத்திற்கு கொண்டு வரப்படும் குப்பைகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டி பதப்படுத்தும் பணிக்கு இயந்திரம் (Shredding Machine) பொருத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.70 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(9320 /2019/இ1)**

**6.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31–ல் உள்ள கொள்ளிடம் தெரு சேதமடைந்து பொதுமக்கள் மாணவ மாணவியர்களின் போக்குவரத்திற்கு இருசக்கர வாகனங்கள் செல்ல இயலாத வகையில் குண்டும் குழியுமாக உள்ளதால் மேற்படி சாலையினை புதிய தார்சாலையாக அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.80 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(3693/2019/இ1)**

**7.** இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.1 எல்லீஸ்சத்திரம் (ES கல்லூரி அருகில்) அமைந்துள்ள நுண்ணுர செயலாக்க மையத் (MCC) திற்கு கொண்டு வரப்படும் குப்பைகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டி பதப்படுத்த தேவைப்படும் இயந்திரம் (Shredding Machine) பொருத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.70 இலட்சத்திற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 15.11.2019–ல் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த விலை விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.R.சிவகாமி ஒப்பந்ததாரர் | ரூ.584000/– | 0.17% குறைவு |
| 2 | திருமதி.T.சந்தியா ஒப்பந்ததாரர் | ரூ.595000/– | 1.71% அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.R.சிவகாமி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட –0.17% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார திட்ட செயலாக்க பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கிய நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(9320/2019/இ1)**

**8.** இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.3, ஆடு அறுக்கும் தொட்டிக்கு அருகில் உள்ள நுண்ணுர செயலாக்க (MCC) மையத்திற்கு தண்ணீர் வசதி, மின்சார வசதி மற்றும் வர்ணம் (Painting) பூசும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.80 இலட்சத்திற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 15.11.2019 கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.R.சிவகாமி ஒப்பந்ததாரர் | ரூ.576724/– | 0.02% குறைவு |
| 2 | திருமதி.T.சந்தியா ஒப்பந்ததாரர் | ரூ.583364/– | 1.13% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.R.சிவகாமி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **–0.02%** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார திட்ட செயலாக்க பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கிய நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(3696/2019/இ1)**

**9.** இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.3, ஆடு அறுக்கும் தொட்டி அருகில் அமைந்துள்ள நுண்ணுர செயலாக்க மையத்திற்கு கொண்டு வரப்படும் குப்பைகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டி பதப்படுத்த தேவைப்படும் இயந்திரம் (Shredding Machine) வாங்கி பொருத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**6.70** இலட்சத்திற்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **15.11.2019** அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.R.சிவகாமி ஒப்பந்ததாரர் | ரூ.584000/– | 0.17% குறைவு |
| 2 | திருமதி.T.சந்தியா ஒப்பந்ததாரர் | ரூ.595000/– | 1.71% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.R.சிவகாமி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **–0.17%** குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் ஏற்று அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார திட்ட செயலாக்க பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கிய நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(3695/2019/இ1)**

**10.** இந்நகராட்சி சொந்தமான வார்டு எண்.**1** எல்லீஸ்சத்திரம் (ES கல்லூரி அருகில்) நுண்ணுர செயலாக்க மையத்திற்கு தண்ணீர் வசதி, மின்சார வசதி மற்றும் வர்ணம் பூசும் (Painting) பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**9.10** இலட்சத்திற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **15.11.2019** அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.R.சிவகாமி ஒப்பந்ததாரர் | ரூ.781429.98 | 0.04% குறைவு |
| 2 | திருமதி.T.சந்தியா ஒப்பந்ததாரர் | ரூ.792998.98 | 1.44% அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.R.சிவகாமி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட –0.04% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார திட்ட செயலாக்க பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கிய நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(3697/2019/இ1)**

**11.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31, கொள்ளிடம் தெரு சாலை சமீபத்தில் பெய்த பருவமழையின் தாக்கத்தால் சேதமுற்று போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதை புதிய தார்தள சாலையாக மாற்ற தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.80 இலட்சத்திற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 15.11.2019 அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.T.சந்தியா ஒப்பந்ததாரர் | ரூ.678405/– | 0.36% குறைவு |
| 2 | திருமதி.R.சிவகாமி ஒப்பந்ததாரர் | ரூ.690200/– | 1.37% அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.T.சந்தியா ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட –0.36% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் அன்றாட போக்குவரத்து நிலையை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கிய நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(3693/2019/இ1)**

**12.** துப்புரவு ஆய்வர்களின் குறிப்பில் நகர் பகுதிகளில் தெரு நாய்கள் அதிகமாக சுற்றி திரிந்து, பொது மக்களுக்கு அச்சம் மற்றும் விபத்துகளை ஏற்படுத்துவதால் கருத்தடை அறுவை சிகிச்சையும், ஆன்ட்டி ரேபிஸ் தடுப்பூசி போடவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

எனவே நகர குடியிருப்பு பகுதியில் சுற்றித் திரியும் தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ள அரசாணை எண் 181, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்–05.04.2013–ன் படி நாய் ஒன்றுக்கு ரூ.700/– வீதம் செலவினம் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது, எனவே இதற்கான உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கெனவே நாய்களை பிடித்து அறுவை சிகிச்சை செய்த சென்னை VOICE FOR ANIMALS, Bethani Home, No.1/1 Letangs Vepery, Chennai 600 007 நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( 6261/2019/எச்2)**

**13.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.28 மீனாட்சி நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெரு, பிள்ளையார் கோவில் தெரு, காமன் கோவில் தெரு, பள்ளர் தெரு மற்றும் ஜீவராஜ் நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைக்கும் பணிக்கு ரூ.**6.20** இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **29.09.2020–ல்** கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | SSV டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரர். | ரூ.**5,95,736/–** | **–0.73%** குறைவு |
| 2 | திரு.K.இராஜா, ஒப்பந்ததாரர். | ரூ.**6,57,699/–** | **9.59%** அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் SSV டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **–0.73%** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(6472/2020/இ2)

**14.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.38 MDG நகர், கட்ட பொம்மன் நகர், திருக்குறிப்பு தொண்டர் நகர், அய்யனார் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் புதியதாக குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைக்கும் பணிக்கு ரூ.**9.00** இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **29.09.2020–ல்** கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | SSV டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரர். | ரூ.**8,74,630/–** | **0.62%** குறைவு |
| 2 | திரு.K.இராஜா, ஒப்பந்ததாரர். | ரூ.**9,88,030/–** | **12.27%** அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் SSV டெவலப்பர்ஸ்,ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **0.62%** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(6474/2020/இ2)

**15.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.04, 36, 20, 42 மற்றும் 30 கணபதி நகர், கலைவாணி தெரு, பெருமாள் நகர், பாணாம்பட்டு மற்றும் அரவிந்தர் நகர், கோவிந்தசாமி நகர், கம்பன் நகர், ஜயராமன் லே அவுட், திரு.வி.க தெரு ஆகிய பகுதிகளில் புதியதாக குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைக்கும் பணிக்கு ரூ.**4.90** இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **29.09.2020–ல்** கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | SSV டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரர். | ரூ.4,73,597/– | –0.75% குறைவு |
| 2 | திரு.K.இராஜா, ஒப்பந்ததாரர். | ரூ.5,50,727/– | 15.41% அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **SSV டெவலப்பர்ஸ்,** ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **–0.75%** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(6470/2020/இ2)

**16.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.08 முத்தோப்பு பகுதியில் புதியதாக குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைக்கும் பணிக்கு ரூ.**3.70** இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **29.09.2020–ல்** கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | SSV டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரர். | ரூ.3,59,408/– | –1.25% குறைவு |
| 2 | திரு.K.இராஜா, ஒப்பந்ததாரர். | ரூ.4,19,125/– | 15.16% அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் SSV டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **–1.25%** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(6473/2020/இ2)

**17.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.36 இந்திரா நகர், MGR நகர் மற்றும் சர்மிளா நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைக்கும் பணிக்கு ரூ.**6.50** இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **29.09.2020–ல்** கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | SSV டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரர். | ரூ.6,32,005/– | –0.72% குறைவு |
| 2 | திரு.K.இராஜா, ஒப்பந்ததாரர். | ரூ.7,30,656/– | 14.77 அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் SSV டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **–0.72%** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(6475/2020/இ2)

**18.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.26, 27 மற்றும் 03 அவ்வை பூமி நகர், கௌதம் நகர் மற்றும் வடிவேல் நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைக்கும் பணிக்கு ரூ.**3.20** இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **29.09.2020–**ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | SSV டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரர். | ரூ.**3,03,548/–** | **–0.63%** குறைவு |
| 2 | திரு.K.இராஜா, ஒப்பந்ததாரர். | ரூ.**3,21,932/–** | **5.39%** அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் SSV டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **–0.63%** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(6471/2020/இ2)

**19.** விழுப்புரம் நகராட்சியின் நூற்றாண்டு விழா வளர்ச்சி திட்ட பணிகளில் ஒன்றான பூந்தோட்டம் குளம் சீரமைக்கும் பணி துவங்கி நடைபெற்று வருகிறது. மேற்படி குளத்தின் தரையின் மேற்பரப்பில் நடைபாதை மற்றும் சிறுவர் பூங்கா பணி துவங்கும் நிலையில் உள்ளது. இப்பணி துவங்கும் முன் மழைக்காலங்களில் வரும் மழைநீர் வெளியே சென்றுவிடாமல் தடுக்க மேற்கு திசையில் உள்ள சாலை, கிழக்கு புரம் உள்ள சாலை மற்றும் பழைய பேருந்து நிலையம் ஆகிய இடங்களிலிருந்து வரும் மழைநீரை வடிகால் மற்றும் சிறுபாலம் மூலம் குளத்திற்கு கொண்டு சென்றால் நீர் வரத்து பெருகும் நிலை உண்டாகும். எனவே, மேற்படி மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.30 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(4070/2020/இ1)**

**20.** இந்நகராட்சிக்குட்பட்ட பயணியர் மாளிகை வளாகத்தில் நூற்றாண்டு விழா சிறப்பு நிதியின் கீழ் நகராட்சிக்கு புதியதாக அலுவலக கட்டிடம் கட்டும் பணி துவங்கிய நிலையில், கட்டிடத்தின் பரப்பளவை அளவு செய்ததில் பயணியர் மாளிகை வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு செல்லும் பிரதான குடிநீர் குழாய் கட்ட போகும் கட்டிட பரப்பளவிற்கு உள்ளே உள்ளது. எனவே, கட்டிடம் கட்டுவதற்கு முன்னரே பிரதான குடிநீர் குழாய் மாற்றியமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**22.90** இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(8441/2020/இ2)

**21.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.42 கோணங்கிபாளையம் பகுதியில் அமைந்துள்ள தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியில் ஆழ்துளை குழாய் கிணறு மூலம் குடிநீர் தேக்கப்பட்டு Zone-II பகுதியில் உள்ள நகருக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சுற்றியுள்ள பகுதிகளில் போதுமான பாதுகாப்பு இல்லாமல் இருப்பதால் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியை பாதுகாக்க வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட பகுதியில் அமைந்துள்ள தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**3.60** இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

**(7126/2020/இ2)**

**22.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.29 NGGO காலனியில் மழைநீர் வடிகால் இல்லாததால் மழைக்காலங்களில் மழைநீர் வடியாமல் சாலையில் தேங்கி நின்று வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகள் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. மேலும் தேங்கும் மழைநீரால் பொதுசுகாதாரத்திற்கு கேடுவிளைவிக்கும் என்பதால் மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.14.90 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

**(4070/2020/இ1)**

**23.** விழுப்புரம் நகராட்சி பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் **2020–21–ன்** கீழ் தார்சாலை மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.**97.00** இலட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்திடப்பட்டதில் Eyedea Brand Solutions நிறுவனத்தின் மூலம் விளம்பரம் வெளியிட்டமைக்கு ரூ.**68,145/–** வழங்குமாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்கண்ட நிறுவனத்திற்கு ரூ.**68,145/–** தொகை வழங்கிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதிக்கலாம். **(4070/2020/இ1)**

**24.** விழுப்புரம் நகராட்சியில் தற்போது வடகிழக்கு பருவமழை காரணமாக தூர்வாரும் பணி நகரின் பல பகுதிகளில் நடைபெற்று வருகிறது. தரைப்பாலம் பகுதியில் அமைந்துள்ள கழிவு நீரேற்றம் செய்யும் கிணறு கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாக தூர்வாரப்படாமல் உள்ளதால் கிணற்றில் அதிகமாக மண் மற்றும் சேறு சேர்ந்ததால் மழைக்காலங்களில் தேங்கும் நீரினை வெளியேறாமல் கழிவு நீர் தேங்கி நிற்பதால் பொதுமக்களுக்கு போக்குவரத்து பாதிப்படைகிறது. இதனை தவிர்க்கும் விதமாக மேற்கண்ட தரைப்பாலம் பகுதியில் அமைந்துள்ள கழிவு நீரேற்றம் செய்யும் கிணற்றினை தூர்வாரும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**3.90** இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம். **(**8352/2020/இ**2)**

**25.** விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.01 வழுதரெட்டி பாளையத்தில் உள்ள மஞ்சாளம்மன் கோவில் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறு பழுதடைந்துள்ளதால் அப்பகுதி மக்கள் குடிநீரின்றி அவதிப்படுவதை தவிர்க்கும் விதமாக, மேற்கண்ட பகுதியில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைப்பதற்கு இரு இடங்களில் நீர் ஆதாரத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பரிசோதனை செய்யப்பட்டது. எனவே, நீர் ஆதாரத்தினை பரிசோதனை செய்ததற்கு ரூ.5000/—ஐ (ரூ.2500/— வீதம் 2 எண்ணிக்கை) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்துவதற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:—</u>

மன்றம் அனுமதி வழங்கலாம். **(7913/2020/இ2)**

**26.** விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 42 வார்டுகள் உள்ளடங்கிய பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் உயர்மின் அழுத்தம் காரணமாக அடிக்கடி பழுதாகி வருவதால் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. மேலும் இப்புகார்களை நிவர்த்தி செய்வதற்கு தேவையான உதிரி பாகங்கள் நகராட்சி அலுவலக இருப்பில் குறைவாக இருப்பதால், தேவையான தெருவிளக்கு உதிரி பாகங்கள் சப்ளை செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீட்டு தொகை ரூ.**7.60** இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:—</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரலாம். **(7911/2020/இ2)**

**27.** விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 42 வார்டுகள் உள்ளடங்கிய பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை சுத்தம் செய்தல், குடிநீரினை சுத்திகரிப்பு செய்தல் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தினை சுத்தம் செய்வதற்கு தேவையான பிளீச்சிங் பவுடர் நகராட்சி அலுவலக இருப்பில் குறைவாக உள்ளது. மேலும் வடகிழக்கு பருவமழை காரணமாக குடிநீரில் கொசுக்கள் அதிகம் உற்பத்தியாக கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் குடிநீரினை பாதுகாக்கும் விதமாக தற்போது 1000 kg = 1 டன் பிளீச்சிங் பவுடர் வாங்குவதற்கும், தேவையாக உள்ள போது ஆண்டு முழுவதும் பிளீச்சிங் பவுடர் வாங்குதற்கும் தயார் செய்யப்பட்ட தோராய செலவினம் ரூ.**3.00** இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:—</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரலாம். **(7912/2020/இ2)**

**28.** விழுப்புரம் நகராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் (12 எண்ணிக்கை) மற்றும் பில்லூர் தலைமை நீரேற்று நிலையங்களில் குடிநீரினை Liquid Chlorination செய்து சுத்தம் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்கண்ட வளாகங்களில் Liquid Chlorination செய்வதற்கு தேவையான Liquid Chlorine Motor மற்றும் HDPE tank மற்றும் அதன் உதிரி பாகங்கள் அடிக்கடி பழுது ஏற்படுவதால் குடிநீரில் Chlorine செய்யும் பணி தடைபட்டு மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்குவதில் சிக்கல் ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட காரணங்களால் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் (12 எண்ணிக்கை) மற்றும் பில்லூர் தலைமை நீரேற்று நிலையங்களில் உள்ள Liquid Chlorine Motor மற்றும் HDPE tank மற்றும் அதன் உதிரி பாகங்களை பழுது நீக்கம் செய்து பராமரிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**3.60** இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(8089/2020/இ2)

**29.** இந்நகராட்சிக்குட்பட்ட **1** முதல் **42** வார்டுகளில் உள்ள **59** எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் தினசரி குடிநீரினை **290** லிட் வீதம் Chlorination செய்து மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது அலுவலக இருப்பில் Chlorine அளவு குறைவாக இருப்பதால் எதிர்வரும் மழைக்காலம் மற்றும் கொரோனா வைரஸ் நோய் தொற்று (COVID-19) ஆகியவற்றை கருத்தில் கொண்டு குடிநீரினை Chlorination செய்து மக்களுக்கு வழங்குவது அவசியமாக உள்ளது. எனவே, பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு தேவையான Liquid Chlorination **(8** மாத காலத்திற்கு**)** சப்ளை செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**5.00** இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(8088/2020/இ2)

**30.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**3507/2004**/பி**3**, நாள்.**09.09.2005** மற்றும் ந.க.எண்.**43339/2006**/பி, நாள்.**01.08.2006** தேதிய சுற்றறிக்கையின் படியும், நகராட்சிகளுக்கு போதிய நிதி ஆதாரத்தை பெருக்கும் பொருட்டும் நகராட்சிக்கு சொந்தமான காலி இடங்களில் கடைகள், அங்காடிகள், பேருந்து நிலையம், திரையரங்குகள், கல்யாண மண்டபங்கள் மற்றும் வாகனம் நிறுத்துமிடங்கள் ஆகியவற்றினை கட்டிக்கொள்ளலாம் எனவும், அதற்கான நிதி ஆதாரத்தினை முன் ஏலம் (Pre-Auction) நடத்தி அதன் மூலம் வைப்பு தொகை மற்றும் முன் பணம் பெற்று பணியினை மேற்கொள்ளலாம் என உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் **01.08.2020** அன்று மாண்புமிகு.சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் விழுப்புரம் நகராட்சிக்கு போதிய நிதி ஆதாரம் உருவாக்கும் பொருட்டு விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்தில் திருவள்ளுவர் சிலை அருகில் **1).**மேற்கு பகுதியில் தற்போது தரைத்தளத்தில் கட்டப்பட்டு வரும் **11** கடைகளின் முதல் தளத்தில் பெரிய வணிக வளாகம் **(**Shop No.1- Staircase West**) 2).**மேற்கு பகுதியில் தரைதளத்தில் கட்டப்பட்டு வரும் **11** கடைகளின் முதல் தளத்தில் வணிக வளாகம் **(**Shop No.2 - Staircase East**)** மற்றும் **3).**பெட்ரோல் பங்க் பின்புறம் தரைதளத்தில் கட்டப்பட்டு வரும் **6** கடைகளின் மீது முதல் தளத்தில் **6** கடைகள் அமைத்திடவும், மேலும் பழைய பேருந்து நிலையத்தின் கிழக்கு பகுதியில் மிகவும் பழுதடைந்த நிலையில் மேற்கூரை தகர கொட்டகை கொண்டு செயல்பட்டு வரும் பூக்கடைகளை காலி செய்துவிட்டு தரைதளம் மற்றும் முதல் தளத்தில் புதியதாக **32** கடைகள் கட்டி முடிக்கலாம் என அறிவுரை வழங்கினார்கள்.

எனவே, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் மற்றும் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் மாண்புமிகு. சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படியும் கீழ்கண்ட பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு அனுமதியும், மேலும் முன் ஏலம் (Pre-Auction) நடைபெற்று விட்டதால், மேற்படி வைப்பு தொகை பெற்று செலவினத்தை மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. விவரம் வருமாறு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | பழைய பேருந்து நிலைய வளாகத்தில் மேற்கு பகுதியில் முதல் தளத்தில் (திருவள்ளுவர் சிலை அருகில்) வணிக வளாகம் (Shop No.1- Staircase West) கட்டும் பணி. | **19,40,000** |
| 2 | பழைய பேருந்து நிலைய வளாகத்தில் மேற்கு பகுதியில் முதல் தளத்தில் (திருவள்ளுவர் சிலை அருகில்) வணிக வளாகம் (Shop No.2 - Staircase East) கட்டும் பணி. | **18,50,000** |
| 3 | பழைய பேருந்து நிலைய வளாகத்தில் பெட்ரோல் பங்க் பின்புறம் முதல் தளத்தில் 6 கடைகளை கொண்ட வணிக வளாகம் கட்டும் பணி. | **14,30,000** |
| 4 | பழைய பேருந்து நிலைய வளாகத்தில் பேருந்து நுழைவு வாயில் கிழக்கு மேற்கு திசையில் கிழக்கு புறமாக (Staircase East) உள்ள பூக்கடைகள் மற்றும் இதர கடைகளை அகற்றி மேற்படி காலியாக உள்ள இடத்தில் தரைதளத்தில் 8 கடைகளை கொண்ட வணிக வளாகம் கட்டும் பணி. (Opp to Dr.Ambedhkar Statue) | **19,80,000** |
| 5 | பழைய பேருந்து நிலைய வளாகத்தில் பேருந்து நுழைவு வாயில் கிழக்கு மேற்கு திசையில் மேற்கு புறமாக (Staircase West) உள்ள பூக்கடைகள் மற்றும் இதர கடைகளை அகற்றி மேற்படி காலியாக உள்ள இடத்தில் தரைதளத்தில் 8 கடைகளை கொண்ட வணிக வளாகம் கட்டும் பணி. (Opp to Dr.Ambedhkar Statue) | **18,40,000** |
| 6 | பழைய பேருந்து நிலைய வளாகத்தில் பேருந்து நுழைவு வாயில் கிழக்கு மேற்கு திசையில் கிழக்கு புறமாக (Staircase East) உள்ள பூக்கடைகள் மற்றும் இதர கடைகளை அகற்றி மேற்படி காலியாக உள்ள இடத்தில் வணிக வளாகத்தின் முதல் தளத்தில் 8 கடைகள் கட்டும் பணி. (Opp to Dr.Ambedhkar Statue) | **14,50,000** |
| 7 | பழைய பேருந்து நிலைய வளாகத்தில் பேருந்து நுழைவு வாயில் கிழக்கு மேற்கு திசையில் மேற்கு புறமாக (Staircase West) உள்ள பூக்கடைகள் மற்றும் இதர கடைகளை அகற்றி மேற்படி காலியாக உள்ள இடத்தில் வணிக வளாகத்தின் முதல் தளத்தில் 8 கடைகள் கட்டும் பணி. (Opp to Dr.Ambedhkar Statue) | **15,50,000** |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. முன் ஏலம் (Pre-Auction) / முன் ஒப்பந்தப்புள்ளி மூலம் பெறப்பட்ட முன்பணம் மற்றும் வைப்பு தொகை கொண்டு செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(5416/2020/இ1)**

**31.** இந்நகராட்சிக்குட்பட்ட எல்லீஸ்சத்திரம் சாலையில் உள்ள நுண்உர செயலாக்க மையத்தில் குப்பைகளை பிரித்து எடுக்கும் போது மின் அழுத்தம் காரணமாக எரிந்துவிட்ட காரணத்தால் நுண்ணுயிர் மையத்திற்கு ஒயரிங் மற்றும் இதர பழுதுகள் சீர் செய்திட அவசர அவசியம் கருதி ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 05.11.2020–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ அய்யனார் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர். | ரூ.98,692/– | –0.09% குறைவு |
| 2 | திரு.R.நாகராஜ், ஒப்பந்ததாரர். | ரூ.99388/– | 0.61% அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீ அய்யனார் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **–0.09%** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(2925/2020/இ1)**

**32.** இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியாளரின் பயன்பாட்டில் உள்ள TN32AB3276 எண்ணிட்ட ஈப்பு வாகனம் மிகவும் பழுதடைந்த காரணத்தினால் மேற்படி வாகனத்தை (மகேந்திரா பொலிரோ) பழுது நீக்கம் செய்திட சங்கலாயா மோட்டார்ஸ் (SCHANGALAYA MOTORS) நிறுவனத்திடமிருந்து ரூ.140794/–க்கு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. எனவே, பணியின் அவசரம் கருதி மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கிடவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(8349/2020/இ1)**

**33.** இந்நகராட்சிக்கு சொந்தமான நகர்நல அலுவலரின் பயன்பாட்டில் உள்ள TN32D3817 எண்ணிட்ட ஈப்பு வாகனம் மிகவும் பழுதடைந்த காரணத்தினால் மேற்படி வாகனத்தை (மகேந்திரா பொலிரோ) பழுது நீக்கம் செய்திட சங்கலாயா மோட்டார்ஸ் (SCHANGALAYA MOTORS) நிறுவனத்திடமிருந்து ரூ.163559/–க்கு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. எனவே, பணியின் அவசரம் கருதி மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கிடவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம். **(8084/2020/இ1)**

**34.** விழுப்புரம் நகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட **5** ஊராட்சி பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு **11.11.2020** அன்று அமைச்சர் வருகை அடிக்கல் நாட்டு விழா விளம்பரம் செய்தது **1)**. தினமலர் நாளிதழ் **11.11.2020** ரூ.**16,800/– 2)**.மக்கள் குரல் நாளிதழ் **11.11.2020** ரூ.**10,500/–** விளம்பர கட்டணம் வழங்குமாறு பட்டியல் வரப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்கண்ட நிறுவனங்களுக்கு ரூ.**27,300/–** தொகை வழங்கிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம். **(7907/2017/இ3)**

**35.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட கீழ்பெரும்பாக்கத்தில் நகராட்சி மூலம் கட்டப்பட்டுள்ள பால்வாடி கட்டிடம் மற்றும் பொதுகழிப்பிடங்களை அகற்றக்கோரி திரு.M.S.நந்து என்கின்ற சிவானந்தம் விழுப்புரம் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு எண்.18/20–ல் மேல்முறையீடு செய்துள்ளார். மேற்கண்ட வழக்கு தொடர்பாக வழக்கறிஞரிடம் வக்காலத்து தாக்கல் செய்திடவும் மற்றும் வழக்கு தொடர்ந்து நடத்திட தெரிவிக்கப்பட்டதன் பேரில் வக்காலத்து தாக்கல் செய்த வகையில் ரூ.5000/– வழங்க கோரி நகராட்சி வழக்கறிஞர் திரு.D.வெங்கடாசலபதி கோரியுள்ளார். எனவே, தொகை வழங்க வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம். **(5387/2020/இ1)**

**36.** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணம் இடங்களில் உள்ள கடைகள் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி.4) அரசாணை (இருபதாண்டுகள்) எண்.147, நாள்.30.12.2000–ன்படி கீழ்காணும் கடைகாரர்கள் அரசாணை நிபந்தனைகள் நிறைவு செய்துள்ளபடியால் 01.04.2019 முதல் கீழ்காணும் வாடகைக்கு உட்பட்டு உரிமம் மேலும் மூன்றாண்டு காலத்திற்கு புதுப்பித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் விவரம் <u>திருவாளர்கள்</u> | கடை எண் | வரி விதிப்பு எண் | 31.03.2018–ல் வாடகை | உயர்வு தொகை | 01.04.2019–ல் உயர்வு செய்யப்பட்ட தொகை | கூடுதல் வைப்புத் தொகை (ம) உரிமம் நீட்டிப்பு கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | <u>கிழக்கு பாண்டிரோடு</u> | | | | | | |
| 1. | க.மான்விழி<br>க/பெ கண்ணன் 1,<br>கிழக்கு பாண்டி ரோடு,<br>விழுப்புரம். | 1 | 219 | 1096/– | 2324/– | 3420/– | 1000+27888=28888<br>0007371/20.10.2020 |
| 2. | மதுரை முத்து,<br>21, முனிசிபாலடி பில்டிங்,<br>கிழக்கு பாண்டிரோடு. | 2 | 220 | 1053/– | 2367/– | 3420/– | 1000+28404=29404<br>0007797/02.11.2020 |
| 3. | சரவணபவானந்தம் | 3 | 221 | 1162/– | 2258/– | 3420/– | 1000+27096=28096<br>0008887/18.11.2020 |
| 4. | பென்னி<br>4, கிழக்கு பாண்டி ரோடு,<br>விழுப்புரம். | 4 | 222 | 1025/– | 2395/– | 3420/– | 1000+28740=29740<br>0007934/04.11.2020 |
| 5. | முகமது அலி,<br>5, கிழக்கு பாண்டி ரோடு,<br>விழுப்புரம் | 5 | 223 | 1760/– | 1660/– | 3420/– | 1000+19920=20920<br>0007465/20.10.2020 |
| 6. | B.விஜயலட்சுமி,<br>6, கிழக்கு பாண்டி ரோடு,<br>விழுப்புரம். | 6 | 224 | 1091/– | 2329/– | 3420/– | 1000+27948=28948<br>0008685/17.11.2020 |
| 7. | அஜீஸ்,<br>7, கிழக்கு பாண்டி ரோடு,<br>விழுப்புரம் | 7 | 225 | 1053/– | 2367/– | 3420/– | 1000+28404=29404<br>0007580/22.10.2020 |
| 8. | A.லோகநாதன்,<br>1, எம்.ஜி.ரோடு,<br>விழுப்புரம். | 1 | 192 | 2386/– | 358/– | 2744/– | 1000+4296=5296<br>0007120/10.10.2020 |
| 9. | A.அகமது பாஷா,<br>2, எம்.ஜி.ரோடு,<br>விழுப்புரம். | 2 | 193 | 1475/– | 707/– | 2182/– | 1000+3516=4516<br>0007653/27.10.2020 |
| 10. | A.அகமது பாஷா,<br>3, எம்.ஜி.ரோடு,விழுப்புரம். | 3 | 194 | 1952/– | 293/– | 2245/– | 1000+3516=4516<br>0007653/27.10.2020 |
| 11. | P.அசோக்குமார்,<br>4, எம்.ஜி.ரோடு,விழுப்புரம். | 4 | 195 | 1952/– | 293/– | 2245/– | 1000+3516=4516<br>0007278/19.10.2020 |
| 12. | P.ராஜன்பாபு,<br>5, எம்.ஜி.ரோடு,<br>விழுப்புரம். | 5 | 196 | 1952/– | 293/– | 2245/– | 1000+3516=4516<br>0007279/19.10.2020 |
| 13. | P.அசோக்குமார்,<br>4, எம்.ஜி.ரோடு,<br>விழுப்புரம். | 6 | 197 | 1950/– | 293/– | 2243/– | 1000+3516=4516<br>0007277/10.10.2020 |
| 14. | விஜயராகவன் | 7 | 198 | 1952/– | 293/– | 2245/– | 1000+3516=4516<br>0007443/20.10.2020 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 15. | சாமிநாதன் முதலியார் | 8 | 199 | 1952/– | 293/– | 2245/– | 1000+3516=4516 0007442/20.10.2020 |
| 16. | R.மாப்பிள்ளை மீரான், 9, எம்.ஜி.ரோடு, விழுப்புரம். | 9 | 200 | 1952/– | 293/– | 2245/– | 1000+3516=4516 0008739/17.11.2020 |
| 17. | R.அப்துல் சமது, 10, எம்.ஜி.ரோடு, விழுப்புரம். | 10 | 201 | 1952/– | 293/– | 2245/– | 1000+3516=4516 0008740/17.11.2020 |
| 18. | K.செல்வம், 11, எம்.ஜி.ரோடு, விழுப்புரம். | 11 | 202 | 1952/– | 293/– | 2245/– | 1000+3516=4516 0008738/17.11.2020 |
| 19. | காஜாமொய்தீன், 12, எம்.ஜி.ரோடு, விழுப்புரம். | 12 | 203 | 2167/– | 325/– | 2492/– | 1000+3900=4900 0008758/17.11.2020 |
| 20. | வெங்கடேசன், 13, எம்.ஜி.ரோடு, விழுப்புரம். (மதியழகி/அண்ணாதுரை) | 13 | 204 | 2167/– | 325/– | 2492/– | 1000+3900=4900 0008749/17.11.2020 |
| 21. | அசன் முகமது | 14 | 205 | 1952/– | 293/– | 2245/– | 1000+3516=4516 7026/15.10.2020 |
| 22. | ஷேக் முகமது, 15, எம்.ஜி.ரோடு, விழுப்புரம். | 15 | 206 | 1950/– | 293/– | 2243/– | 1000+3516=4516 0007652/27.10.2020 |
| 23. | V.அய்யனார், 16, எம்.ஜி.ரோடு, விழுப்புரம். | 16 | 207 | 1950/– | 293/– | 2243/– | 1000+3516=4516 0008756/17.11.2020 |
| 24. | V.அய்யனார், 17, எம்.ஜி.ரோடு, விழுப்புரம். | 17 | 208 | 1950/– | 293/– | 2243/– | 1000+3516=4516 0008757/17.11.2020 |
| 25. | ஜெயபிரகாஷ், 6,அங்காளம்மன் கோவில் தெரு, விழுப்புரம் | 6 | 764 | 1843/– | 276/– | 2119/– | 1000+3312=4312 0007490/20.10.2020 |
| 26. | முகிலன், 7,அங்காளம்மன் கோவில் தெரு, விழுப்புரம் | 7 | 765 | 1843/– | 276/– | 2119/– | 1000+3312=4312 0007489/20.10.2020 |
| 27. | காசீம் | 8 | 216 | 1787/– | 268/– | 2055/– | 1000+3216=4216 0008968/19.11.2020 |
| 28. | பெருமாள் நாட்டார், 9,அங்காளம்மன் கோவில் தெரு, விழுப்புரம். | 9 | 217 | 1737/– | 261/– | 1998/– | 1000+3132=4132 0007121/10.10.2020 |
| 29. | சுப்புராயன், 10,அங்காளம்மன் கோவில் தெரு,விழுப்புரம். | 10 | 218 | 1843/– | 276/– | 2119/– | 1000+3312=4312 0007095/10.10.2020 |

மேற்க்கண்ட அனைத்து குத்தகை இனங்களும் அரசு ஆணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி கண்காணிப்பு குழுவினரால் தற்போதைய அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை அமுல்படுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். (அ1/150/2019)

**37.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் 27.10.2020 தேதிய சுற்றறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி 110—ன் கீழ் 19.03.2020 அன்று வெளியிட்ட அறிவிப்பு மற்றும் அரசாணை (4ப) எண்.6 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள்.03.09.2020 தேதியின்படி நகர்ப்புற இளைஞர்கள் மற்றும் அனைத்து வயதினரும் உடற்பயிற்சி மற்றும் யோகா பயிற்சி ஊக்குவிக்கும் வகையில் நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்கள் மற்றும் திறந்தவெளிகளில் 120 சதுர மீட்டர் பரப்பளவிற்கு குறைவில்லாத இடத்தில் யோகா மையக்கட்டிடம் கட்டவும், 100 சதுர மீட்டர் பரப்பளவிற்கு குறைவில்லாத இடத்தில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்கள் அமைக்குமாறு தெரிவிக்கப்பட்டதன்பேரில் விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட மகாராஜபுரத்தில் உள்ள (TNHB) நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 100 சதுர மீட்டர் கொண்ட திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் தேவையான உபகரணங்கள் அமைக்கவும் தோராய செலவீனம் ரூ.18.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும் பணியின் அவசரம் அவசியம் கருதி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

**(8024/2020/இ1)**

**38.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் 27.10.2020 தேதிய சுற்றறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி 110—ன் கீழ் 19.03.2020 அன்று வெளியிட்ட அறிவிப்பு மற்றும் அரசாணை (4ப) எண்.6 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள்.03.09.2020 தேதியின்படி நகர்ப்புற இளைஞர்கள் மற்றும் அனைத்து வயதினரும் உடற்பயிற்சி மற்றும் யோகா பயிற்சி ஊக்குவிக்கும் வகையில் நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்கள் மற்றும் திறந்தவெளிகளில் 120 சதுர மீட்டர் பரப்பளவிற்கு குறைவில்லாத இடத்தில் யோகா மையக்கட்டிடம் கட்டவும், 100 சதுர மீட்டர் பரப்பளவிற்கு குறைவில்லாத இடத்தில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்கள் அமைக்குமாறு தெரிவிக்கப்பட்டதன்பேரில் விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட மகாராஜபுரத்தில் உள்ள (TNHB) நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 120 சதுர மீட்டர் கொண்ட யோக மையம் அமைக்க தோராய செலவீனம் ரூ.20.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும் பணியின் அவசரம் அவசியம் கருதி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

**(8024/2020/இ1)**

**39.** விழுப்புரம் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு (COVID-19) கொரோனா வைரஸ் தடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கீழ்கண்ட விவரப்படி கிருமி நாசினிகள் கிரீன் அக்ரோ என்விரான்மென்ட் சர்வீஸஸ், எண்.6,கார் தெரு, மதுராந்தகம் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு அதற்கான தொகை வழங்க பட்டியல் சமர்ப்பித்துள்ளார்கள்.

| வ. எண். | பட்டியல் எண் | கிருமி நாசினி விவரம் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | 226/நாள்—19.11.2020 | நீர்த்த சுண்ணாம்பு— 10 டன் | 97650/— |
| 2 | 230/நாள்—19.11.2020 | நீர்த்த சுண்ணாம்பு— 10 டன் | 97650/— |
| 3 | 235/நாள்—19.11.2020 | நீர்த்த சுண்ணாம்பு—10 டன்ரூ97650/—<br>பிளீச்சிங் பவுடர்— 5 டன்ரூ259600 | 357250/— |
| **மொத்தம்** | | | **552550/—** |

எனவே மேற்கண்ட தொகை ரூ.552550/– ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை மாநில பேரிடர் நிவாரண நிதியிலோ அல்லது வருவாய் நிதியிலோ மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(2116–1/2020/எச்1)**

**40.** விழுப்புரம் நகராட்சியில் (COVID-19) கொரோனா வைரஸ் தடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் விழுப்புரம் அவர்களின் நேரடி அறிவுரைக்கிணங்கவும், தமிழ்நாடு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின் படியும் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்க, விழிப்புணர்வு பேனர்கள், படிவங்கள், முகக்கவசம் அணியாதவர்களுக்கு அபராதம் வசூலிக்கும் புத்தகங்கள், COVID-19 அவசரம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று கூட்டுறவு அச்சகமான Villupuram District Printing & Stationary Service Industrial Co-operative Society Limited, No.295 A East Pondy Road, Villupuram-605602 பணி உத்தரவு வழங்கப்பட்டது. அதற்கான தொகை வழங்க கீழ்கண்ட விவரப்படி பட்டியல் சமர்ப்பித்துள்ளார்கள்.

| வ. எண் | பட்டியல் எண்&தேதி | விவரம் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | 816/16.11.2020 | கொரோனா தடுப்பு நடவடிக்கை தூய்மை பணியாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை முகாம் பேனர்–4<br>(பணிஉத்தரவு ந.க.எண்:–2116-3/2020/H1 நாள்:–23.04.2020) | 3000/– |
| 2 | 825/16.11.2020 | சேவை/அபராத கட்டண ரசீது(1+1புத்தகம்)–100<br>(பணி உத்தரவு ந.க.எண்:–2116-3/2020/H1 நாள்:–5.5.2020) | 19000/– |
| 3 | 844/16.11.2020 | கொரோனா தடுப்பு நடவடிக்கை பொதுமக்களுக்கு விழிப்புணர்வு விவரம்அடங்கிய பேனர்–100<br>(பணி உத்தரவு ந.க.எண்:–2116-3/2020/H1 நாள்:–23.06.2020) | 20000/– |
| 4 | 855/16.11.2020 | 1.பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை இணைந்து நடத்தும் COVID-19 கொரோனா தடுப்பு நடவடிக்கை சிறப்பு மருத்துவமுகாம் பேனர் –10<br>2.கெரோனா தொற்று தனிமைப்படுத்தப்பட்ட வீடு போஸ்டர் – 1000 (பணி உத்தரவு ந.க.எண்:–2116-3/2020/H1 நாள்:–18.07.2020) | 6000/–<br>5500/– |
| 5 | 868/16.11.2020 | பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை இணைந்து நடத்தும் COVID-19 கொரோனா தடுப்பு நடவடிக்கை சிறப்பு மருத்துவமுகாம் பேனர் –7<br>(பணி உத்தரவு ந.க.எண்:–2116-3/2020/H1 நாள்:–05.08.2020) | 4200/– |
| 6 | 876/16.11.2020 | கெரோனா தொற்று தனிமைப்படுத்தப்பட்ட வீடு போஸ்டர் –1000<br>(பணி உத்தரவு ந.க.எண்:–2116-3/2020/H1 நாள்:–18.08.2020) | 5500/– |
| 7 | 858/16.11.2020 | சேவை/அபராத கட்டண ரசீது (1+1புத்தகம்)–100<br>(பணி உத்தரவு ந.க.எண்:–2116-3/2020/H1 நாள்:–23.08.2020) | 19000/– |
| | | **மொத்த தொகை** | **82200/–** |

மேற்கண்ட தொகை ரூ 82200/– ஐ Villupuram District Printing & Stationary Service Industrial Co-operative Society Limited, No.295 A East Pondy Road, Villupuram-605602 வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட தொகையை மாநில பேரிடர் நிவாரண நிதி அல்லது வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(2116– /2020/எச்1)**

**41.** விழுப்புரம் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு (COVID-19) கொரோனா வைரஸ் தடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு 144 ஊரடங்கு உத்தரவு மேலும் நீட்டிக்கப்பட்ட நிலையில் இந்நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் பொருட்டு கபசுர குடிநீர் மற்றும் நிலவேம்பு குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 27.04.2020 விலைப்புள்ளி கோரப்பட்டது. கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விவரம் | கபசுர குடிநீர் (1 கிலோ+5 %GST) ரூ | நிலவேம்பு குடிநீர் (1 கிலோ+5 % GST) ரூ |
|---|---|---|---|
| 1 | நேதாஜி பார்மஸி, 6, பழனியப்பாநகர், திண்டுக்கல். | 780/– | 670/– |
| 2 | AB Pharma Distributors<br>211C/ 84 , Chinnasamy Pillai Street,<br>Madurai. | 1300/– | – |
| 3 | Mahadev Pharma Distributors<br>6/284 Periyar nagar, Trichirapalli | 1225/– | – |

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை மாநில பேரிடர் நிவாரண நிதியில் அல்லது வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் அதனை தொடர்ந்து குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நேதாஜி பார்மஸி, 6, பழனியப்பா நகர், திண்டுக்கல் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(2116–13/2020/எச்1)**

**42.** விழுப்புரம் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு (COVID-19) கொரோனா வைரஸ் தடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சியில் உள்ளே வரும் பணியாளர்கள் மற்றும் வெளி நபர்களுக்கு Sanitizer தெளிக்க வேண்டியுள்ளதால் Automatic Sanitizer Machine (2 Ltrs Capacity) 2 எண்ணிக்கையில் வழங்கும் பணிக்கு 15.07.2020š விலைப்புள்ளி கோரப்பட்டது. கீழ்கண்ட விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விவரம் | Sanitizer Machine 2 Nos(GST Extra) ரூ |
|---|---|---|
| 1 | Vee care Aqua No.2, Mariamman kovil street, VOC Street, Attur, Salem | Rs. 4500/- |
| 2. | Venus Enterprises 6/38Veeraganur Main Road, Aniyampatty post, Gangavalli taluk, Salem | Rs.5300/- |
| 3. | Vee Light, Plot No.2, Voc Main Road,Pudupettaipo,Attur.Tk, Salem | Rs.5000/- |

மேற்கண்ட விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Vee Care Aqua No.2, Mariamman Kovil Street, VOC Street, Attur, Salem அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இதற்கான உத்தேச செலவினம் ரூ12000/– ஐ மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரியதையும், அதனை தொடர்ந்து குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Vee care Aqua No.2, Mariamman kovil street, VOC Street, Attur, Salem அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதையும், மேலும் அதற்கான தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(2116–22/2020/எச்1)

**43.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.K.Dis No.31117/P3/2015 நாள் . 07.11.2015 ல் இந்நகராட்சிக்கு 158 தூய்மை பணியாளர் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் 3 வருடத்திற்கு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு கிரீன் வாரியர், திருவள்ளூர் என்ற நிறுவனத்திற்கு, பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.09.2016 முதல் தூய்மை பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி ஒப்பந்த காலம் 31.08.2019ல் முடிவடைவதால், பொதுசுகாதார நலன் கருதி மேற்படி ஒப்பந்த காலத்தினை மேலும் 6 மாத காலத்திற்கு (01.09.2019 முதல் 29.02.2020 வரை) நீட்டிப்பு செய்து தனி அலுவலரின் தீர்மான எண் 1818 நாள் 20.09.2019 ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி அனுமதிக்கப்பட்ட 158 தூய்மை பணியாளர்களை மேலும் மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நீட்டிப்பு செய்ய அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் வழியாக கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டு நிலுவையில் உள்ளது. உரிய அனுமதி பெறப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெறுவதற்கு காலதாமதமாவதால், பொது சுகாதாரப்பணிகள் பாதிப்பு ஏற்படாமல் இருக்க, மேலும் 3 மாதம் (01.03.2020 முதல் 31.05.2020 வரையும் நகர மன்ற தனி அலுவலரின் தீர்மான எண் 2019 நாள் 27.02.2020 தொடர்ந்து மேலும் 3 மாதம் 01.06.2020 முதல் 31.08.2020 வரையும் நகர மன்ற தனி அலுவலரின் தீர்மான எண். 2103 நாள்.29.05.2020, தொடர்ந்து 01.09.2020 .முதல் 30.11.2020 வரை நகர் மன்ற தனி அலுவலரின் தீர்மான எண் 2207. நாள். 31.08.2020 வரை அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் உரிய அனுமதி வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே பொது சுகாதார பணிகள் பாதிக்கப்படாமலிருக்கவும், தற்சமயம் கொரோனா தொற்று விழுப்புரம் நகராட்சியில் தொடர்ந்து உள்ளதாலும், மற்றும் வடகிழக்கு பருவமழை மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கை அதனை கட்டுப்படுத்தும் பணியில் தூய்மை பணியாளர்கள் பங்கு அவசியம் என்பதாலும், மேலும் 3 மாத காலத்திற்கு (01.12.2020 முதல் 28.02.2021 வரை) ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.90.00 இலட்சம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

( /2020/எச்1)

**44.** கொரோனா வைரஸ் தொற்று உள்ள பகுதிகளில் தற்போது மருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் விழுப்புரம் அவர்களின் உத்தரவுப்படி, முகாம் நடைபெறும் இடங்களில் சாமினா பந்தல் , டேபிள், சேர் அமைத்து முகாம் நடைபெற்று வருகிறது. இம்முகாம் 21.07.2020 முதல் தொடர்ந்த நடைபெற்று வருகிறது. இதற்கான செலவினத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.2227 நாள் 31.08.2020 மற்றும் நகர்மன்ற தீர்மான எண்.2262 நாள். 29.09.2020 ல் தலா ரூ 3 இலட்சம் வீதம் ரூ6 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் **21.07.2020** முதல் **01.09.2020** வரை மருத்துவ முகாமிற்கு பந்தல் அமைத்த வகையில் ரூ.**3,56,300/–** செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது **02.09.2020** முதல் **10.11.2020** வரை மருத்துவ முகாமிற்கு பந்தல் அமைத்த வகையில் ரூ.**6,95,080/–** க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மாவட்ட ஆட்சியர் அவர்கள் மறு உத்தரவு வரும் வரை தொடர்ந்து மருத்துவ முகாமை எவ்வித தடங்களும் இன்றி நடத்த ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்ததால், மருத்துவ முகாம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எனவே தற்போது முகாம் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் கூடுதலாக ரூ.**8.00** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை மாநில பேரிடர் மேலாண்மை நிதி அல்லது வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**45.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் காணொலி காட்சி ஆய்வுக்கூட்டம் மற்றும் ஆய்வுக்கூட்ட நடவடிக்கையில் "நுண்ணுயிர் உரமாக்கும் மையத்தினுள் கீழ்கண்ட விவரப்படியான பேனர் நிரந்தரமாக வைக்க வேண்டும் என தெரிவித்தார்கள்.

**பேனர் வாசகம்**

- குப்பைகள் முறையாக தரம் பிரித்து பெற வேண்டும். நுண்ணுயிர் மையத்தில் பெறப்பட்ட கழிவுகளில் உலர் கழிவுகள் இருந்தால் அவற்றை தனியாக பிரித்தெடுக்க வேண்டும்.
- அதிக ஈரப்பதம் கொண்ட பழங்கள், காய்கறிகள் மற்றும் பழச்சாறு நிலையங்களில் இருந்து பெறப்படும் கழிவுகள் ஆகியவற்றை தனியாக பிரித்தெடுத்து **50** சதவீதம் ஈரப்பதம் குறையும் வரை வெயிலில் உலர வைத்து அதன் பின் தொட்டியில் இட வேண்டும்.
- குறைந்த ஈரப்பதம் கொண்ட காய்கறிக்கழிவுகளை **30** சதவீதம் ஈரப்பதம் குறையும் வரை உலர வைத்து அதன் பின் தொட்டியில் இட வேண்டும்.
- கழிவுகளை தொட்டியில் இட்ட பின்னர் அடர் சாணக்கரைசலை தெளிக்க வேண்டும். தொட்டி முழுவதுமாக நிறைந்த பின்னர்தொட்டியின் மேல் பகுதியில் அடர் சாணக்கரைசல் தெளிக்க வேண்டும்.

எனவே நகராட்சியில் உள்ள **8** நுண்ணுயிர் உரமாக்கும் மையத்தினுள் மேற்படி பேனர் வைக்க பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று கூட்டுறவு அச்சகமான Villupuram District Printing & Stationary Service Industrial Co-operative Society Limited, No.295 A East Pondy Road, Villupuram-**605602** க்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது.அதற்கான தொகை வழங்க கீழ்கண்ட விவரப்படி பட்டியல் சமர்ப்பித்துள்ளார்கள்.

| வ. எண் | பட்டியல் எண்& தேதி | விவரம் | தொகை ரூ |
|---|---|---|---|
| **1** | **869/ 16.11.2020** | நுண்ணுயிர் உரமாக்கும் மையம் வழிகாட்டு அறிவுரைகள் அடங்கிய பேனர் **(10X15) 8** எண்ணிக்கை (பணிஉத்தரவு ந.க.எண்: 2116–/2020/H1நாள்:**05.08.2020)** | **38,400/–** |

மேற்கண்ட தொகை ரூ.38400/– ஐ Villupuram District Printing & Stationary Service Industrial Co-operative Society Limited, No.295 A East Pondy Road, Villupuram–605602 க்கு வழங்கவும், மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**
**விழுப்புரம் நகராட்சி.**